(3) கோயம்புத்தூரிலுள்ள ஸ்ரீராணி லெக்ஷ்மி பஞ்சடித்தல்—நூல் நூற்றல்—நெசவு ஆலை தனியார் லிமிடெட் மூடப்பட்டது.

திரு கே. ராஜாராம் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர்நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கோயம்புத்தூரிலுள்ள ஸ்ரீராணி லெக்ஷ்மி பஞ்சடித்தல்-நூல் நூற்றல் நெசவு ஆலை தனியார் லிமிடெட்டின் நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்குமிடையே எந்தவித தகராறுமின்றி, ஆனால், தொழிற் சங்கங்களுக்கிடையேயுள்ள தொழிலாளர்களுக்குள் ஏற்பட்ட குறிப்பிட்ட சிலதகராறுகள் காரணமாக மேற்படி ஆலை மூடப்பட்டதும், அதன் விளைவாக அந்த ஆலையில் பணிபுரியும் 175 தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடு குறித்தும், உற்பத்தி இழப்பு குறித்தும், தேவையான நடவடிக்கையை அரசு விரைந்து எடுக்க வேண்டிய அவசியம் குறித்து."

மாண்புமிகு திரு க. இராசாராம் : தலைவரவர்களே, மேற்படி பஞ்சாலையில் 180 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்.

மேஸ்திரிகள் செய்து வந்த வேலையாகிய கமான் அடித்து மிஷின் விடும் வேலையை அறியாத் தொழிலாளர்களைச் செய்யச் சொல்லியதால், அதை மறுத்து தொழிலாளர்கள் முன்னறிவிப்பின்றி 20—8—73 முதல் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். மேஸ்திரிகள் இதுவரைக்கும் அவ்வேலையைச் செய்து வந்ததாக தொழிலாளர்கள் தரப்பில் விவாதமாகும். தொழிலாளர்கள் வேலையிழந்த காலத்திற்கு கூலி தரப்பட வேண்டுமென்றும் கோரப்பட்டது.

இது சம்பந்தமாக கோவை தொழிலாளர் துறை உதவி ஆணையர் சமரச பேச்சு வார்த்தைகள் நடத்தி 22—10—73-ல் அவரது அறிக்கையை அனுப்பினார். கமான் அடித்து மிஷின்விடும் வேலையை யார் செய்வது என்ற வழக்கு 16—11—73 நாளிட்ட அரசு ஆணை 2362 (தொழிலாளர் நல வேலை வாய்ப்புத் துறை)-ல் கோவை தொழில் நீதிமன்றத் தீர்ப்பிற்காக விடப்பட்டுள்ளது. ஆனால் பஞ்சாலை வேலை செய்யாதிருந்த காலத்திற்குரிய கூலி கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையைத் தீர்ப்பிற்கு விட அரசு மறுத்து விட்டது. மேற்கூறியவாறு வழக்கை தீர்ப்பிற்காக அனுப்பியும் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பவில்லை.

கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் இவ்விஷயத்தைத் தொடர்ந்து பரிசீலித்து தொழிலாளர்கள் வேலைக்கு திரும்புவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளக் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தார். அவருடைய முயற்சிகள் பயனளிக்கவில்லை. தொழிலாளர் துறை ஆணையர் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.